செ.வெ.எண்: 22 நாள்:08.10.2021

**பத்திரிக்கைச் செய்தி**

நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 12.09.2021, 19.09.2021, 26.09.2021 மற்றும் 03.10.2021 ஆகிய நாட்களில் மாபெரும் தடுப்பூசி முகாம்கள் நடைபெற்றதில் 85,325, 31,448, 59,753 மற்றும் 33,953 பேர் தடுப்பூசி செலுத்தி பயன்பெற்றனர். அதேபோல் **10.10.2021 5-ம் கட்டமாக ஞாயிற்றுக்கிழமை** அன்று அனைத்து ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் ஆகிய பகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனைகள் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், ஊட்டச்சத்து மையங்கள் மற்றும் அரசு தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் உள்ள 650 நிலையான முகாம்கள் மூலமாகவும் 100 நடமாடும் குழுக்கள் மூலமாகவும் ஆக மொத்தம் 750 முகாம்கள் காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை கொரோனாநோய் மெகா தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது.

இம்முகாம் பணிகளில் 210 மருத்துவர்கள், 430 செவிலியர்கள், 1,600 அங்கன்வாடி பணியாளர்கள், 1,400 தன்னார்வலர்கள், 415 பயிற்சி செவிலியர்கள் மற்றும் 265 பயிற்சி சுகாதார ஆய்வாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு சுமார் **1,17,500** தடுப்பூசிகள் செலுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த முகாமில் அந்தந்த பகுதிகளில் உள்ள பொதுமக்கள் முழுமையாக பங்கேற்று இதுவரை ஒருதவணை தடுப்பூசி கூட போடாதவர்களும் முதலாம் தவணைபோட்டு முடித்து இரண்டாம் தவணைக்காக நிலுவையில் உள்ளவர்களும் தவறாமல் தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அரசு அளிக்கின்ற இந்த தடுப்பூசியானது 100 சதவீதம் பாதுகாப்பானது. பக்கவிளைவுகள் இல்லாதது. நம்பகத்தன்மை கொண்டது. தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் அந்தந்த மையங்களிலேயே அரைமணி நேரம் மருத்துவ குழுவினரின் கண்காணிப்பில் இருந்தாலே போதுமானது. அதன் பின்னர் நாம் செய்யும் அனைத்து விதமான வழக்கமான பணிகளையும் எவ்வித தடையுமின்றி மேற்கொள்ளலாம். எந்தவித பத்தியமும் இன்றி எல்லாவகை உணவுகளையும் வழக்கம் போல எடுத்துக்கொள்ளலாம்.

மேலும் உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் மற்றும் சிறுநீரக செயலிழப்பு உள்ளவர்களும் எந்தவித தயக்கமும் இன்றி எடுத்துக் கொண்டோமேயானல் கொரோனா நோய் தொற்றின் வீரியம் குறைவாக காணப்படும். பொதுமக்கள் தவறாமல் முகாமில் பங்கேற்க மகளிர் சுய உதவிகுழுக்கள், தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து துறை அரசு ஊழியர்களும் தங்களின் பங்களிப்பை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஓம்/-ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப,**
**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**நாமக்கல் மாவட்டம்.**